மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ) மனு எதுவும் பெறப்படவில்லை.

(ஆ) திட்டமெதுவும் அமுலிலில்லை.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவரவர்களே, இந்த வேதாரண்யம் தொகுதி கடலோரப் பகுதியாக இருப்பதால்-இறைவைப் பாசனத் திட்டம் இல்லாவிட்டாலும் - மேல் நாடுகளில் கடல் நீரிலிருக்கிற உப்பை நீக்கி, விவசாயக் காரியங்களுக்குப் பயன் படுத்துவதைப்போல, நம்முடைய அரசும் வேதாரண்யம் பகுதியில் கடல் நீரிலுள்ள உப்பை நீக்கி, நீர்ப்பாசன வசதிக்கு ஏற்பாடு செய்து, விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நன்மை செய்யும் திட்டத்தை உருவாக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: உறுப்பினர் அவர்களுடைய நல்ல ஆலோசனைகள் அனுதாபத்தோடு பரிசீலிக்கப் படும்.

[முற்பகல் 9·10]

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வேதாரண்யம் பிரசித்தி பெற்ற ஒரு ஸ்தலம். அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்கள் தண்ணீர் இன்றி பெரிதும் சிரமப் படுகிறார்கள். எனவே அரசாங்கம் அந்தப் பகுதியிலுள்ள தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தனியாக ஒரு குழு அமைத்து பரிசீலித்து அவர்களுக்குத் தண்ணீர் கொடுப்பதற்கான வழிவகை செய்ய முன் வருமா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனை நல்லதொரு யோசனையாக இருக்கின்றது. ஆகவே, அவர் தனிக் கேள்வி ஒன்று போடுவாரேயானால் அது குறித்து ஆய்ந்து ஆவன செய்ய தமிழக அரசு உறுதியாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிரதம வங்கிகளிலிருந்து கடன் வழங்கல்

வின எண் 178—திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பிரதம வங்கிகளில் கடன் வழங்க பிரதம வங்கி ஊழியர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மதிப்பீட்டு அதிகாரிகளை நியமிக்க 1976-ம் ஆண்டில் அரசு அனுமதித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அந்த உத்திரவு அமுலாக்கப்பட்டுள்ளதா?

1978 செப்டம்பர் 13]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ) ஆம். இத் திட்டம் தென்னாற்காடு மாவட்டத்தில் மட்டும் முன்னோடி திட்டமாக நடத்த ஆணையிடப்பட்டுள்ளது.

(ஆ) ஆம். இந்த உத்தரவு அமுலாக்கப்பட்டுள்ளது.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1976-ஆம் ஆண்டில் அரசு பிறப்பித்த ஆணையின் விளைவாக நியமிக்கப்பட்டு இருக்கின்றவர்களுடைய எண்ணிக்கை எத்தனை? அவர்கள் எந்தெந்த பகுதிகளில் பணியாற்றுகிறார்கள் என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இத் திட்டம் முன்னோடி திட்டமாகத் தென்னாற்காடு மாவட்டத்தில் மட்டும் இம்முறைக்கு செயல்படுத்தப்பட்டு வருகின்றது. தென்னாற்காடு மாவட்டத்தில் தற்போது பணிபுரியும் 21 கூட்டுறவு சார் பதிவாளர்கள், 4 கடைநிலை ஊழியர்கள், இவர்களில் 17 கூட்டுறவு சார் பதிவாளர் பதவிகளை ஒழித்து விட வேண்டும். மீதம் உள்ள 4 கூட்டுறவு சார் பதிவாளர்களையும் நான்கு கடைநிலை ஊழியர்களையும் வைத்து தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள ஒரு கூட்டுறவுத் துணைப் பதிவாளர் வட்டத்துக்கும் ஒரு சிறு ஆய்வுக்குழு ஏற்படுத்த வேண்டும். இந்த நான்கு கூட்டுறவு சார் பதிவாளர்கள், நான்கு கடைநிலை ஊழியர்கள் ஆகியோருக்கான செலவு முழுவதையும் மாநில நிலவள வங்கி ஏற்றுக்கொள்ளும். வேளாண்மை மறுநிதி வளர்ச்சிக் கழக உதவி பெறும் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக நியமிக்கப்பட்டுள்ள தொழில் நுட்ப மேற்பார்வையாளர், வங்கி மேற்பார்வையாளர் ஆகியோருக்கான செலவை தற்போது வழக்கிலுள்ள முறைப்படி அரசே மானியமாக வழங்கும். இத் திட்டம் தென்னாற்காடு மாவட்டத்தில் 4-5-78லிருந்து செயல்படுத்தப்படுகிறது. மாநில நிலவள வங்கி முதலாவதாக பல பிரதம நிலவள வங்கியிலிருந்து 12 நில மதிப்பீட்டு அதிகாரிகளைத் தேர்ந்தெடுத்து தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள பிரதம நிலவள வங்கிகளில் நியமித்துள்ளது. நேர்காணலில் அவர்கள் பெற்றுள்ள மதிப்பெண்களையும், மாநில நிலவள வங்கியின் கிளை மேலாளர்கள் பரிந்துரை செய்துள்ளதையும் அடிப்படையாக வைத்து இந்த நில மதிப்பீட்டு அதிகாரிகளை மாநில நிலவள வங்கி நியமித்துள்ளது. நாளாவட்டத்தில் மாநில நிலவள வங்கி தேவையானல் நில மதிப்பீட்டு அதிகாரிகளின் எண்ணிக்கையைத் தக்கவாறு அதிகமாக்கும்.